**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.88** **நாள் : 03.06.2024**

**தமிழ்நாடு விலங்குகள் நல வாரியம், கால்நடை பராமரிப்புத் துறை மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் இன்று சென்னை மெரினா கடற்கரையில் நடத்தப்பட்ட வெறிநாய்க்கடி நோய் தடுப்பூசி மற்றும் ஒட்டுண்ணி மருந்து (Endectoparasiticide) செலுத்தும் முகாமினை கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்தார்.**

தமிழ்நாடு விலங்குகள் நல வாரியம், கால்நடை பராமரிப்புத் துறை மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் இன்று (03.06.2024) சென்னை மெரினா கடற்கரையில் நடத்தப்பட்ட வெறிநாய்க்கடி நோய் தடுப்பூசி மற்றும் ஒட்டுண்ணி மருந்து (Endectoparasiticide) செலுத்தும் முகாமினை கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்து, நாய்களுக்கு தடுப்பூசியினை செலுத்தினார்.

இந்த முகாமில் 26 செல்ல நாய்கள் உட்பட மொத்தம் 132 நாய்களுக்கு வெறிநாய்க்கடி நோய் தடுப்பூசி மற்றும் ஒட்டுண்ணி மருந்து செலுத்தப்பட்டது.

**கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் அவர்கள் பேசும்போது தெரிவித்ததாவது:**

பாதுகாப்பற்ற முறையில் செல்லப்பிராணிகளை வளர்ப்போர் பொது வெளியில் செல்லப்பிராணிகளை கொண்டு செல்லக் கூடாது. தற்போதுள்ள சட்டவிதிகளின்படி பெருநகர சென்னை மாநகராட்சி செயல்படும் போது, செல்லப்பிராணிகளை வளர்ப்போர் அதிக கவனம் செலுத்தி மற்றவருக்கு இதனால் எந்தப் பாதிப்பும் ஏற்படாத வகையில் பார்த்துக் கொள்ள வேண்டும். மேலும், செல்லப்பிராணிகளை பொது இடங்களுக்கு அழைத்துச் செல்லும் பொழுது கழுத்துப்பட்டையுடன் சங்கிலி இல்லாமல் கொண்டு செல்வதைத் தவிர்க்கவும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

தமிழ்நாடு விலங்குகள் நல வாரியம், கால்நடை பராமரிப்புத் துறை மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆகியவை இணைந்து பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட அனைத்து மண்டலங்களிலும் உள்ள 200 வார்டுகளிலும் அடுத்த ஒரு மாதத்தில் நாய்கள் கணக்கீடு செய்யும் பணி மேற்கொள்ளப்படும். தேர்தல் நடத்தை விதிமுறைகளுக்கு பிறகு இந்தப் பணிகள் தொடங்கப்படும். வெறிநாய்க்கடி நோய் தடுப்பூசி செலுத்தும் பணி வருடத்திற்கு முதல் தவணையாக 20,000 வெறிநாய்க்கடி நோய் தடுப்பூசிகள் செலுத்தப்படுகிறது எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், தமிழ்நாடு விலங்குகள் நல வாரிய தலைமை நிர்வாக அதிகாரி டாக்டர் சுரேஷ் சுப்ரமணியம், தமிழ்நாடு விலங்குகள் நல வாரிய உறுப்பினர் டாக்டர் நம்பி, பெருநகர சென்னை மாநகராட்சி கால்நடை மருத்துவ அலுவலர் டாக்டர் கமால் உசேன், கால்நடை உதவி அறுவை சிகிச்சை நிபுணர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அலுவலர்கள், கால்நடை நல தன்னார்வலர்கள் மற்றும் நாய் பிடிப்பவர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**